பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 21 திங்கட்கிழமை 04.03.2024 கதிர் 118

## வழியெங்கும் மக்கள் அஞ்சலி

# சாந்தனின் புகழுடல் ஊர் வந்து சேர்ந்தது



### ஆரத்தி எடுத்து வரவேற்ற சகோதரி இன்று இறுதிக் கிரியைகள்

**சாந்தன் என்றழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் புகழுடல் வவுனியாவிலிருந்து வழியெங்கும் அஞ்சலிகளுடன் நேற்று மாலை வடமராட்சியில் உள்ள அவரது சொந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. அவரது சகோதரியின் வீட்டை புகழுடல் அபங்கிய பேழை நெருங்கியதும் "அண்ணா வருகிறார் ஒருத்தரும் அழாதேங்கோ" என்று கூறிய அவரது சகோதரி ஆரத்தி எடுத்து வீட்டுக்குள் வரவேற்றார். அங்கு அஞ்சலிக்காகக் கூடியிருந்த பெருமளவானவர்கள் கனத்த இதயங்களுடன் இந்தக் காட்சிகளைக் கண்டனர்.**

☞ 13

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திபோடும், பின்தள்ளும் அல்லது கருத்துக்கணிப்பின் மூலம் அதனை தவிர்க்கும் ரணிலின் எந்த முயற்சியும் வெற்றிபெறுவதற்கான அறிகுறிகள் இல்லாத காரணத்தால் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்கிற குழப்பம் ஆளும் தரப்புக்குள் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது.

பொது ஜன பெரமுனவுக்குள் இருந்தபடி ரணிலிடமிருந்து அமைச்சுப் பதவியைப் பெற்றவர்கள், மீண்டும் ரணிலே ஜனாதிபதியாகவேண்டும், அப்போதுதான் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்று பகிரங்கமாகவே கருத்துத் தெரிவிக்கிறார்கள். ஆனால், கட்சியின் பொதுச் செயலாளர்

☞ 2

## விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் நாவலடி பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். அவரது கணவர் பலத்த காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அப்துல் ஹமீத் ஜமீலா என்கிற 53 வயது பெண்ணே விபத்தில் உயிரிழந்தார். ஓட்டமாவடியில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் தனது மகளை பார்த்துவிட்டு, வெலிகந்த, குடாபொகுன பிரதேசத்திலுள்ள தமது வீட்டுக்கு கணவனும் மனைவியும் மோட்டார்

☞ 2

## இரட்டை நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவே முடியாது

### ஐ.நா.வில் இலங்கை அறிவிப்பு

அரசியல்மயப்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்குத் துணைபோகும் சில தரப்பினரின் 'இரட்டை நிலைப்பாடுகளை' தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி காஸாவிலுள்ள மக்களின் நிலைவரம் மோசமடைந்திருக்கும் நிலையில், அதுபற்றிய தீர்மானங்களும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் எங்கே? எனவும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை கேள்வி எழுப்பியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. அதன்படி இன்று இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் குறித்து ஆராயப்படவுள்ள நிலையில், நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் நேற்று முன்தினம் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கினால் வாய்மொழிமூல அறிக்கை வெளியிடப்பட்டது.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டவரைபை அரசு வெளியிட்டிருப்பினும், நம்பத்தகுந்த உண்மையைக் கண்டறியும் செயன்முறைக்கு ஏதுவான

☞ 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதில் கவனம் தேவை

### ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு அழுத்தம்

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து வழங்குவது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் உத்தரவாதம் வழங்கியுள்ள அதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் விடயத்தில் மேலும் முன்னேற்றம் எட்டப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 26ஆவது கூட்டம் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார சேவைப்பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்திய பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் பயோலா பம்பலோனி ஆகியோர் தலைமையில் கடந்த மாதம் 22ஆம் திகதி ப்ருஸேல்ஸில் நடைபெற்றது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கியதாக இரு தரப்பினரும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதன்படி இக்கூட்டத்தின் போது பொருளாதார பாதுகாப்புக் கொள்கை, செயற்கை நுண்ணறிவுசார் கொள்கை, வர்த்தக மற்றும் மனித உரிமைகள் நிலைப்பாடு, சூழலியல் பாதுகாப்பு, உலகளாவிய இணைப்பு உத்தி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்திய - பசுபிக் உத்தி என்பன உள்ளடங்கலாக கடந்த சில வருடங்களில் தாம் பின்பற்றிவந்த முக்கிய கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகள்

☞ 2

### சபாநாயகருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று நாடாளுமன்றம் வருகிறது

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் கையளிக்கப்படவுள்ளதாக எதிர்கட்சியின் பிரதம அமைப்பாளரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும்

☞ 13

## விவசாய நவீன மயமாக்கலுக்கான தேசிய வேலைத் திட்டம் தயாரிப்பு

### உத்தரவிட்டார் ஜனாதிபதி ரணில்

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் இணைத்து தேசிய வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் வருடாந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தனித்தனியாகச் செயற்படுவதால், எதிர்பார்த்த முடிவுகள் தாமதமடைவதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்வதற்காக அரச மற்றும் தனியார் விவசாய ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகக் கட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதன் முக்கியத்துவத்தையும்

☞ 13

## நாளாந்தம் உணவு விலை அதிகரிப்பு ஆனாலும் ஜனாதிபதி சுற்றுலாவில்

### எதிர்க் கட்சித் தலைவர் தாக்கு

பால் தேனீர், தேனீர், தின்பண்டங்கள், சிற்றுண்டிகள், சாப்பாடுப் பொதிகள், கொத்து போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. 24 மணி நேரமும் 365 நாட்களும் நாட்டில் விலை அதிகரிப்பு கலாச்சாரமே இருந்து வருகிறது. விலைவாசி உயர்ந்து, மக்களின் வாழ்க்கை சீரழிந்தாலும், அரசிடம் இதற்கான பதில் இல்லை. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பணத்தை பெற்றுக்கொண்டு வெளிநாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ரணசிங்க பிரேமதாசவின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத்திட்டத்தின் பின்னர், நாட்டுக்கு டொலர்களைப் பெற்றுக்கொள்ளும் உள்நாட்டு சர்வதேச அளவிலும் இன்னும் எந்தத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. இவ்வாறு போகும் போக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் 100 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டாலும் டொலர்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எமது நாட்டால் மின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. அரசாங்கம்

☞ 8

## கறுப்புக் கொடிகளோடு மீனவர்கள் யாழ். கடலில் நேற்றுப் போராட்டம்

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களால் படகுகளில் கறுப்புக் கொடி ஏற்றியும் கறுப்புக் கொடிகளைப் தாங்கிப் பிடித்தவாறும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடல் பகுதிக்குள் அத்துமீறி மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இந்திய இழுவை மடி படகுகளை எதிர்த்து கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்வதற்கே யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சமாச

☞ 13

## எந்தவொரு அரசியல் உரிமையையும் ரணில் தமிழர்களுக்குத் தரமாட்டார்

### விக்னேஸ்வரன் எம்.பி. சாடல்

பொலிஸ் அதிகாரங்களுடனோ அல்லது பொலிஸ் அதிகாரம் இன்றியோ அவர் எந்தவொரு அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார் என தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வெளியிட்ட கருத்து நேர்மையானதல்ல. அவருக்கு ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்தவேண்டும். அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும். அதற்காகவே ஜனாதிபதி இப்படிச் சொல்கிறார் என்றும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களையும் வழங்குவதற்குத் தான் தயாராக இருப்பதாக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கும் சி.வி.விக்கினேஸ்வரன் மேலும் கூறியிருப்பதாவது:

இது வேடிக்கையாக உள்ளது. தமிழர்களுக்குத் தருவதற்கென அரசிடம் எதுவுமில்லை. 13ஆவது திருத்தம் என்பது எமது நாட்டு அரசியலமைப்பின் ஓரங்கமாகும். அதனை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறிருக்கையில் அவ்வதிகாரங்களைத் தருவதாக ஜனாதிபதி கூறுவதன் மூலம் இலங்கை சுதந்திரமடைந்தது முதல் 'சிங்களவர்களால்

☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சாகர காரிவாசமும் ராஜபக்ச குடும்பத்து இளவல் நாமலும் கட்சி தனியாக ஒரு வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று காய் நகர்த்துகிறார்கள். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும்கூட அதற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றார்கள்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு புறமொதுக்கிவிடக்கூடிய அளவிற்குச் சின்னதல்ல என்பது அண்மையில் தம்புள்ளயில் அப்பட்டமாகத் தெரிந்தது. பெரமுன கட்சியின் தம்புள்ளை தொகுதி முக்கிய பிரமுகர் பிரமித பண்டார தென்னகோன். ரணிலின் ஆளும் தரப்பில் அவர் தற்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுப் பதவியை வகிப்பவர். ஜனாதிபதி ரணிலுடனும் நெருக்கமான தொடர்பாடலைப் பேணி வருபவர். ரணில்தான் அடுத்த தடவையும் ஜனாதிபதியாகவேண்டும் என்று குரல் கொடுத்த பெரமுன அமைச்சர்களில் அவரும் ஒருவர். அவரது ஏற்பாட்டில் கட்சியின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் ஒன்று தம்புள்ளையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடந்தது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தக் கூட்டத்திற்கு முக்கிய விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். ரணதுங்கவும் ரணிலே மீண்டும் ஜனாதிபதியாகவேண்டும் என்று வலியுறுத்தும் பெரமுன அமைச்சர்களில் முக்கியமானவர்.

இந்தக் கூட்டத்தில் ரணிலுக்கு ஆதரவான தனது நிலைப்பாட்டை பிரமித்த உறுதியாக எடுத்து வைத்தார். பெரமுனவின் சில கொள்கைகளை அந்தக் கூட்டத்தில் விமர்சிக்கவும் அவர் தயங்கவில்லை. கூட்டத்தில் இருந்த சிலர் பிரமித்தவின் கருத்துக்களை எதிர்த்தனர். இருந்தபோதும் அவர் தனது ரணில் ஆதரவு நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். இது, ரணில் மொட்டுக் கட்சியை ஆழமாக உடைக்கத் தொடங்கிவிட்டார் என்பதையே காட்டுகின்றது.

தம்புள்ளையில் பிரமித்த நடத்திய கூட்டம் மற்றும் அவர் கட்சிக்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்களை அறிந்ததும் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் நாமல் ஆகியோரும் அவர்களது ஆதரவாளர்களும் கொதித்தொழுந்தனர். தம்புள்ள கூட்டத்திற்குப் போட்டியாக மாத்தளையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். மாத்தளையின் கட்சியின் முக்கிய பிரமுகரான ஜனக பண்டார தென்னகோன் மற்றும் இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தில் தீவிர ராஜபக்ச விசுவாசிகளான திஸ்ஸ குட்டியாராச்சி மற்றும் இந்திக அனுருத்த ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் கூட்டத்தில் திடீரென நாமல் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக்கவேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். அதனை அங்கிருந்தவர்கள் ஆதரித்தனர். நாமலை அப்படி வேட்பாளராகத் தெரிந்தெடுப்பது என்பது முன்கூட்டியே செய்யப்பட்ட முடிவு அல்ல. இருந்தாலும் அந்த முடிவு கட்சிக்குள் ஒரு புது உற்சாகத்தை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை இரவு,கட்சியின் பொறியியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ச போட்டியிடவேண்டும் என்று தீர்மானங்களை நிறைவேற்றினர். விரைவில் தொகுதி மட்டத்தில் நாமலின் வேட்புமனுவை உத்தியோகபூர்வமாக முன்மொழிந்து அங்கீகரிப்பதற்கான திட்டங்கள் தற்போது கட்சிக்குள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த முன்னேற்றங்கள் எல்லாம் ஆளும் தரப்புக்குள் மட்டுமல்ல, மொட்டுக் கட்சிக்குள்ளும் ஜனாதிபதித் தேர்தலையொட்டி ஆழமான பிளவு ஏற்பட்டுள்ளது என்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றது.

கட்சிக்குள் நிகழ்ந்துவரும் இந்த மாற்றங்களை அடுத்து கட்சியின் உருவாக்கியான பஸில் ராஜபக்ச அவசர அவசரமாக நாடு திரும்புகின்றார். முதலில் ஏப்ரல் பிற்பகுதியில் நாடு திரும்பத் திட்டமிட்டிருந்த அவர், அனேகமாக நாளை நாடு திரும்கிறார் என்று தெரிகிறது. அவர் வந்ததும் கட்சியிக்குள் நிலவும் குழப்பங்கள் மற்றும் அடுத்தடுத்த அரசியல் நகர்வுகள் குறித்து முடிவுகள் விரைவாக எடுக்கப்படும் என்று நம்பப்படுகின்றது. அனேகமாக தேர்தல் நெருங்கும் சமயத்தில் பெரமுனவை எதிர்க் கட்சி வரிசையில் அமர வைப்பதை நோக்கி இந்த நகர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி ஆளும் தரப்பிலிருந்து எகிறி எதிர்த் தரப்புக்குத் தாவ பஸிலும் மொட்டுக் கட்சியும் காய் நகர்த்திக்கொண்டிருக்கும் போது, கடந்த வாரம் ஜனாதிபதி ரணிலும் மொட்டுவின் தலைவர் மகிந்த ராஜபக்சவும் நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர். ஜனாதிபதிக்கும் மஹிந்தவுக்கும் இடையில் கடந்த காலங்களில் இது போன்ற பல சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. ஷங்ரிலா ஹோட்டலிலும் ஏனைய விசேட இடங்களிலும் இருவரின் சந்திப்புக்களுக்குப் பின்னர் இதுபற்றிக் கேட்ட தனது நண்பர்களிடம், ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடல்களில் அரசியல் விடயங்கள் எதனையும் பேசுவதில்லை என்றும், தன்னைச் சுற்றி நடக்கும் சில நிகழ்வுகள் பற்றியே இருவரும் கலந்துரையாடுவர் என்றும் கூறியுள்ளார்.

ஆனால், கடந்த வாரம் இரவு விருந்தில் நடந்த இந்த சந்திப்பு, அதைவிட வேறு முகத்தை எடுத்திருக்கலாம் என பலரும் நினைக்கின்றனர். இதற்குக் காரணம், ஜனாதிபதி தற்போது அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ளதால், அதிலிருந்து தப்ப இப்போது அவருக்கு மகிந்தவை விட்டால் வேறு யாரும் இல்லை என்கிற நிலையில் இந்தச் சந்திப்பில் அரசியல் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருக்கும் என்று கருதப்படுகின்றது.

**இடிமின்னல்**

## இரட்டை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழல் இலங்கையில் இல்லை எனவும், ஒடுக்குமுறைச்சட்டங்கள் மற்றும் எதேச்சதிகாரப்போக்கிலான நடவடிக்கைகள் மூலம் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை அடைந்துகொள்ளமுடியாது எனவும் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் அவரது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதனையடுத்து அவரது அறிக்கை தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்தியும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்தியும் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணாதிலகவினால் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

அண்மைய காலங்களில் முகங்கொடுத்திருக்கும் சவால்களிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில், நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் ஜனநாயகக் கட்டமைப்பக்களின் நிலையான தன்மையைப் பேணும் அதேவேளை, பொருளாதார மீட்சி மற்றும் நல்லிணக்கம் சார்ந்த இலக்குகளில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

அதேவேளை பொருளாதார நெருக்கடியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள வறிய மற்றும் நலிவுற்ற மக்களுக்கு உதவும் நோக்கில் சமூகப்பாதுகாப்பு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரத்துறை சார்ந்த விடயங்களில் வழமையான நிலையை அடைந்துகொள்வதில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

அதேபோன்று மிகத் தீவிர மட்டுப்பாடுகள் இருப்பினும், தேசிய ஒருமைப்பாடு, போரின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கான எமது முயற்சிகள் மாற்றமின்றித் தொடர்கின்றன.

அத்தோடு ஏற்கனவே நிறுவப்பட்ட உள்ளகப் பொறிமுறைகளின் ஊடாக இவ்விடயத்தில் முன்னேற்றத்தை எட்டுவதில் இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

அதன்படி, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டவரைபு தொடர்பான கலந்துரையாடல்கள் அரசாங்கம், சிவில் சமூகம், சர்வ மதத்தலைவர்கள் மற்றும் சட்ட நிபுணர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று காணாமல்போனோர் அலுவலகத்துக்கு முதற்கட்டமாகக் கிடைக்கப்பெற்ற 6,025 முறைப்பாடுகளில் 5,221 முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

1,313 குடும்பங்களுக்கு காணாமல்போனமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதுடன் அது செல்லுபடியாகும் காலத்தை எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரை நீடிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக கடந்த ஆண்டு நாடு முகங்கொடுத்திருந்த நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் ஊடாக காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு 42 மில்லியன் ஷரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகமானது பாராளுமன்றத்தின் நிறைவேற்றப்பட்ட பிரத்யேக சட்டத்தின் ஊடாக மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சார்ந்த விவகாரங்களைக் கையாள்வதற்கும், தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குமென ஜனாதிபதி செயலகத்தின்கீழ் விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஆதாரங்களை திரட்டுவதற்கான வெளியகப் பொறிமுறையை முன்மொழிந்திருக்கும் 46/1 மற்றும் 51/1 ஆகிய இரண்டு தீர்மானங்களையும் நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையானது நிதிநெருக்கடி மற்றும் மனிதவளப்பற்றாக்குறைக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய பயனற்ற பொறிமுறைக்கு உறுப்புநாடுகளின் நிதியைப் பயன்படுத்துவது பேரவையின் கோட்பாடுகளுக்கு முரணானதாகும்.

அதன் நோக்கம் சில நபர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதேயன்றி, அதனூடாக இலங்கை மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிட்டாது.

அடுத்ததாக தற்போது கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் சில உள்நாட்டு சட்டங்கள் தொடர்பில் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டத்தைப் பொறுத்தமட்டில், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட சகல தரப்பினரிடமிருந்தும் ஆலோசனைகளை பெற்று அதனைத் திருத்தியமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலித்த உயர்நீதிமன்றம், இச்சட்டமூலம் குறித்த தமது நிலைப்பாட்டை அறிவித்திருக்கிறது.

அடுத்ததாக, அரச சார்பற்ற அமைப்புக்கள் குறித்த சட்டமூலம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்களுடன் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. இவையனைத்தும் இலங்கையில் முன்மொழியப்படும் எந்தவொரு சட்டமூலத்தையும் சவாலுக்குப்படுத்தும் சுதந்திரம் பொதுமக்களுக்கு உண்டு என்பதையே காண்பிக்கிறது.

மேலும், தேசிய பாதுகாப்புக் கரிசனைகளைக் கவனத்திற்கொள்ளும் அதேவேளை, சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டியது அவசியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எமது அண்மைய கால நடவடிக்கைகளே அதற்கு சான்றாகும்.

அதேபோன்று பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணங்களை வழங்குவதை விடுத்து, அரசியல்மயப்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்கு துணைபோகும் சில தரப்பினரின் 'இரட்டை நிலைப்பாடுகளை' எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. காஸாவில் உள்ள மக்கள் தீவிர அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளனர். அவ்வாறிருக்கையில் அது பற்றிய தீர்மானங்களும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளும் எங்கே? என்று கேள்வி எழுப்பினார். - என்றார்.

## பயங்கரவாத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமளித்தனர். அதேவேளை பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீட்சி ஆகியவற்றில் கடந்த ஆண்டு எட்டப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

அதன்படி, நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், நலிவடைந்த நிலையில் உள்ளோருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான நகர்வுகள் இலங்கையால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சி என்பன தொடர்பில் தமது வாழ்த்தினைத் தெரிவித்தனர்.

அதேபோன்று காலநிலை மாற்ற சவால்களைக் கையாளல், சூழல் நேய சக்திவலு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப நிலை மாற்றத்துக்கு நிதியளித்தல், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல், உள்நாட்டுக் கடன் நெருக்கடியைக் குறைத்தல், பயங்கரவாத குற்றங்கள், தவறான அல்லது போலித்தகவல் அச்சுறுத்தல்கள் என்பன உள்ளடங்கலாக சமகாலத்தில் உலகளாவிய ரீதியில் நாடுகள் முகங்கொடுத்துவரும் சவால்கள் தொடர்பில் இக்கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டது.

அதுமாத்திரமன்றி சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் சர்வதேச சட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பிலும் இங்கு விசேடமாக குறித்துரைக்கப்பட்டது.

அடுத்ததாக இவ்வாண்டு நாட்டில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர்.

குறிப்பாக அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமென அவர்கள் உறுதியளித்தனர். அதற்குப் பதிலளித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இலங்கை அழைப்பு விடுக்கும் பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்றை அனுப்பிவைப்பதற்குத் தயாராக இருப்பதாகக் கூறினர்.

மேலும், கடந்த மாதம் 6ஆம் திகதி நிகழ்நிலை முறைமையில் நடைபெற்ற வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை பணிக்குழு கூட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அதன்படி, ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து மீளாய்வு செய்வதற்கான நடைமுறை தொடர்பில் விளக்கமளித்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள், புதிய நடைமுறை அமுலுக்கு வந்தவுடன் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மூலம் பயனடையும் இலங்கை உள்ளிட்ட நாடுகள் அதனைத் தொடர்ந்து பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக்காட்டினர். அதற்குப் பதிலளித்த இலங்கை பிரதிநிதிகள், இரு தரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர வர்த்தகத் தொடர்புகளை நினைவுகூர்ந்ததுடன் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குவது குறித்து அளிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு நன்றி தெரிவித்தனர்.

அதேவேளை ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்குரிய கடப்பாடுகள் உரியவாறு பூர்த்திசெய்யப்படுகின்றனவா என ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து கண்காணிக்கும் என அத்தரப்பு பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் ஊடாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கும், அச்சட்ட வரைபை சர்வதேச தராதரங்களுக்கு அமைவாகத் தயாரிப்பதற்கும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் பற்றி இலங்கை பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

அதனை செவிமடுத்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இருப்பினும் இவ்விவகாரத்தில் மேலும் முன்னேற்றம் எட்டப்படவேண்டும் என வலியுறுத்தினர்.

அத்தோடு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்போரின் விடுவிக்கப்பட்டோர் தொடர்பான விபரங்கள், சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயச் சட்டத்தின் பிரயோகம், காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற உள்ளக சுயாதீனக் கட்டமைப்புக்களின் இயக்கம், பயங்கரவாதத்தை முறியடிப்பதில் ஒத்துழைப்புடன் செயலாற்றல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்தபோதே விபத்து நேர்ந்துள்ளது. மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் பாய்ந்தமையே இந்த விபத்துக்கு காரணம் என கூறப்படுகிறது. இந்த விபத்தில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் மனைவி உயிரிழந்துள்ளார். இந்நிலையில், 56 வயதுடைய பெண்ணின் கணவர்

8ஆம் பக்கம் பார்க்க...

காலைக்கதிர் Kalaikkathir

# அஞ்சல் திணைக்களத்தின் வியாபாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டப் பேரணி






(பாறுக் ஷிஹான்)

அஞ்சல் திணைக்களத்தின் புதிய நடைமுறையின் படி வியாபாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் கல்முனை நகரை மையப்படுத்தி கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்எம். பைஸர் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சி திட்டம் அஞ்சல் மா அதிபரின் எண்ணக்கருவின் அடிப்படையில் கிழக்கு மாகாண அஞ்சல் மா அதிபதி எம்.எச்.எம். அஸ்லம் வழிகாட்டலில் அக்கரைப்பற்று அம்பாறை பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பியந்தவின் பங்கேற்புடன் கல்முனை அஞ்சல் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகி தரவைப்பிள்ளையார் கோவில் அருகில் சென்று மீண்டும் கல்முனை பிரதம அஞ்சலை பேரணி வந்தடைந்தது.

குறித்த பேரணியில் அஞ்சல் திணைக்களத்தின் புதிதாக நடைமுறைப்படும் திட்டங்களான கேஷ் ஆன் டெலிவரி சர்வீஸ், இஎம்எஸ், எஸ்எல் போஸ்ட் கூரியர் சர்வீஸ் உள்ளிட்ட சேவைகள் தொடர்பாக விழிப்பூட்டல்களைத் துண்டுப்பிரசுரம் மூலம் நகரப்பகுதி வர்த்தக நிலையங்கள் பொதுமக்கள் இடையே விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த பேரணியில் அக்கரைப்பற்று அம்பாறை பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பியந்த, கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்எம். பைஸர் உட்பட அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களும் பங்கேற்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

## சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய சிறுவனுக்கு கௌரவிப்பு

### கிளிநொச்சியில் நடந்தது





அபுதாபி கிண்ணம் 2024 சர்வதேச உதைப்பாட்ட தொடரில் 12 வயது பிரிவில் இலங்கை அணி சார்பாக பங்குபற்றிய கிளிநொச்சியை சேர்ந்த சுரேஸ்கண்ணா தனுஸ் என்ற சிறுவன் சனிக்கிழமை கௌரவிக்கப்பட்டுள்ளான்.

முற்போக்கு சமத்துவ இளைஞர் அணியினரால் இச் சிறுவனை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றது.

இலங்கை அணிசார்பாக தெரிவாகிய சுரேஸ்கண்ணா தனுஸ் அபுதாபியில் இடம்பெற்ற சர்வதேச கழங்கங்களுடனான தொடர்பில் விளையாடியிருந்தான்.

எனவே மேற்படி சிறுவனின் திறமையை பாராட்டி கௌரவிக்கும் வகையில் கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து ஊர்வலமாக மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு அங்கு சிறுவனை பாராட்டி வாழ்த்துரைகள் இடம்பெற்றதோடு, பாராட்டு கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

முற்போக்கு சமத்துவ இளைஞர் அணியை சேர்ந்த கபிலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திகுமார், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.மோகனதாஸ், சிவபாத கலையக பாடசாலை அதிபர்,

கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதி அதிபர், அருத்தந்தை, விளையாட்டு வீரர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05-113)

## அனுமதியின்றி ட்ரோன் கமரா பறக்க விட்டவர் கைதானார்

கணினச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட 2 திருவையாறு பகுதியில் இராணுவ முகாம் மீது டோன் கமரா பறக்க விட்டவர் கிளிநொச்சி பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 25 வயது உடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் தான் குறும்படம் ஒன்றை தயாரிப்பதற்காகவே டோன் கமராவை பறக்க விட்டதாகவும் வேறு எந்த காரணமும் அல்ல என்று இளைஞன் தெரிவித்துள்ளார் இருப்பினும் இராணுவத்தினர் கிளிநொச்சி பொலீஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05- 113)

## அதிக வெப்பநிலை காரணமாக திரவ உணவெடுக்க ஆலோசனை

அதிக வெப்பநிலை காரணமாக பொதுமக்கள் உண்ணும் உணவு மற்றும் பானங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் .

அதன்படி, திரவ உணவுகளை உட்கொள்வது மிகவும் அவசியமானது என ஹொரண மாவட்ட பொது வைத்தியசாலையின் போஷாக்கு நிபுணர் வைத்தியர் ஜானக மாரசிங்க தெரிவித்தார். (05)

## தகராறில் மூவர் காயம்

மீகஹாகிவுல பிரதேசத்தில் இரு தரப்பு பெண்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் 3 பெண்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூன்று பெண்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒரு பெண் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். முன் விரோதம் காரணமாக இந்தத் தகராறு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## களுபோவிலவில் ஒருவர் கைது போதை மாத்திரிரைகளும் சிக்கின



பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் 1,000 போதை மாத்திரைகளை கடத்திய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வெள்ளிக்கிழமை களுபோவில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுபோவில பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடையவராவார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொஹுவல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சரியான பாதையில் பயணம்

விவசாய நவீனமயமாக்கலுக்கான தேசிய வேலைத் திட்டம் ஒன்றை நியமிக்க அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். தனியார் மற்றும் அரச துறைகளை உள்ளடக்கியதாக இந்த வேலைத் திட்டத்தை தயாரிக்கும்படி இந்த உத்தரவில் அவர் தெரிவித்துள்ளார். இப்போதுதான் அவர் இது விடயத்தில் சரியான பாதைக்கு வந்துள்ளார் என்று தோன்றுகின்றது.

வரவு செலவுத் திட்டத்தில் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் வருடாந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டாலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தனித்தனியாகச் செயற்படுவதால், விவசாய அபிவிருத்தியில் எதிர்பார்த்த முடிவுகள் எட்டப்படவில்லை என்பதை அடுத்தே அரசுத் தலைவர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்.

எனவே, திட்டங்களைச் செயற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்காக அரச மற்றும் தனியார் விவசாய ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகக் கட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்திருந்தார். ஆளும் தரப்பின் கொள்கைகளுக்கு அமைய கீழ் மட்டத்தில் அமுல்படுத்தக்கூடிய வகையில் இந்த தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அங்கு சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், இதனுடன் தொடர்புள்ள 26 திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

அரச மற்றும் தனியார் துறைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர விவசாய தொழில் முயற்சியாளர்களை உள்ளடக்கிய கூட்டு வேலைத்திட்டத்தின் மூலம் இந்த சவாலை வெற்றிகொள்ள முடியும் எனவும் விவசாய ஏற்றுமதி பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதே தமது நோக்கமாகும் எனவும் அரசுத் தலைவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

அரசுத் தலைவராகப் பதவியேற்றது முதலே ரணில் விக்கிரமசிங்க விவசாய நவீனமயமாக்கல் மற்றும் உற்பத்திப் பெருக்கம், ஏற்றுமதிசார் உற்பத்தி என்பன பற்றித் தொடர்ந்து பேசி வருகின்றார். வடக்கை நெல் உற்பத்திக் களஞ்சியமாக்குதல் என்றெல்லாம் பேசி வருகின்றார். ஆனால் களத்தில் அதற்கான எந்த அறிகுறிகளையும் காணமுடியவில்லை. இன்னும் சொல்லப்போனால் வயல் நிலங்களில் விவசாயிகளுக்கு விளைபொருளுக்கு, நெல்லுக்கு உற்பத்தி விலைகூடக் கிடைக்கவில்லை என்கிற நிலைதான் இருக்கின்றது. இந்த நிலையில் ஏற்றுமதிக்கான உற்பத்தி எப்படிச் சாத்தியம்?

இந்தியாவைப் போன்ற 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் பசுமைப் புரட்சித் திட்டங்கள் (இந்தியாவின் மோசமான அபிவிருத்தி முன்னுதாரணங்களைத் தவிர்த்து) உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டால் தவிர இந்த விடயத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள் எவையும் ஏற்படாது. உற்பத்தியைப் பெருக்காமல் நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதும் சாத்தியமல்ல. அப்படியே சாத்தியப்பட்டாலும் அது சுற்றுலாத்துறையின் மீது கட்டப்பட்டு நிற்கும், அது நிரந்தரமானது அல்ல. எனவே விவசாயத்தில் தன்னிறைவும் ஏற்றுமதிக்கான உற்பத்தியும் அதிகரிக்கப்படவேண்டும். அதற்கான சீரிய, நேர்த்தியான பல பத்தாண்டுகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுவதே ஆளும் தரப்புக்கள் செய்யவேண்டிய முக்கிய பணி. ரணில் அந்தப் பாதையில் தனது முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறார். இதிலாவது அவர் உறுதியாகத் தனது இலக்கு நோக்கி நடப்பார் என்று எதிர்பார்ப்போம்.



# டெல்லியில் விவசாயிகள் போராட்டம் இந்தியத் தலைநகரம் முற்றுகை

ஐங்கரன் விக்கினேஸ்வரா



இந்தியாவில் பாஜக மத்திய அரசு கடந்த 2020ஆம் ஆண்டில் வேளாண் சட்டங்களை கொண்டு வந்தவேளை, அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த விவசாயிகள் பெரும் போராட்டத்தில் இறங்கினர். இந்தப் போராட்டம் சுமார் ஓராண்டு வரை நீண்டது.

அதன் பின்னரே வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதாக மத்திய அரசு அறிவித்தது. இப்போது தலைநகர் டெல்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டத்தை மீண்டும் தொடங்கியுள்ளனர்.

விவசாய விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலையை நிர்ணயிக்கும் சட்டம் இயற்றப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மீண்டுமொரு தொடர் போராட்டத்தை டெல்லியில் பஞ்சாப், ஹரியானா விவசாயிகள் தெருக்களில் இறங்கியுள்ளனர்.




'டெல்லி ஷலோ' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் போராட்டத்திற்குப் பல விவசாய அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. டெல்லி ஷலோ எனும் கோஷம் இந்திய சுதந்திர போராட்டத்தின் போது சுபாஷ் சந்திர போஸின் புகழ்பெற்ற முழக்கமாகும்




டெல்லி ஷலோ..ஷலோ இத்திய சுதந்திர போராட்டத்தின்போது சுபாஷ் சந்திரபோஸின் புகழ்பெற்ற

முழக்கமான "டெல்லிஷலோ" (டெல்லி நோக்கிச் செல்லுங்கள்) எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் போராட்டத்திற்கு சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஜ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 விவசாய அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தப் போராட்டதிற்காக ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பீகார், கேரளா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லியை நோக்கிப் படையெடுத்துள்ளனர்.

**பஞ்சாப் உழவர்களின் கோரிக்கை:**

முக்கியமாக ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லியை நோக்கிப் பேரணியை தொடங்கினர். குறைந்தபட்ச உத்தரவாத விலைக்கான உத்தரவாதம் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் இதில் கலந்துகொண்டு டெல்லியை முற்றுகையிட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடங்கும் முன்பு விவசாய சங்கத்தினர் கேரளா, உத்தரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, உத்தரகாண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்குச் சென்று அந்தந்த மாநில விவசாயிகளிடம் நேரடியாக ஆதரவு கோரியது குறிப்பிடத்தக்கது.

இப்போது விவசாயிகள் டெல்லியில் மீண்டும்

(5ஆம் பக்கம் பார்க்க..)

# டெல்லியில் விவசாயிகள் போராட்டம்...........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தை அறிவித்து குறைந்தபட்ச உத்தரவாத விலை உள்ளிட்ட வாக்குறுதிகளை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இந்த விவசாயிகள் போராட்டம் தொடர்பாக மத்திய அரசுக்கு உளவுத் துறை சமர்பித்த தகவல்கள் வெளியாகி யுள்ளது. தலைநகர் டெல்லியை விவசாயிகள் முற்றுகையிட முயன்றுள்ள நிலையில், அனைத்து நுழைவாயில்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

முக்கிய நுழைவாயில்களை தவிர்த்துவிட்டு தொலைலவில் மற்றும் சாலை வசதிகள் முறையாக இல்லாத நுழைவாயில்களை பயன்படுத்தி டெல்லியை முற்றுகையிட விவசாயிகள் முடிவு செய்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

### ஆதரவளிக்கும் காங்கிரஸ் கட்சி:

விவசாயிகளுக்கு மத்திய அரசு அநீதி இழைப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. இது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், விவசாயிகளுக்கு அளித்த உத்தரவாதங்களை மோடி அரசு நிறைவேற்றவில்லை. விவசாயிகளுக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெருஞ் சாலைகளில் ஆணித் தடுப்புகள் பற்றிய வீடியோக்கள் வைரலான நிலையில் அதைப் பகிர்ந்திருந்த காங்கிரஸ் மூத்த தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி, விவசாயிகளின் பாதையில் ஆணி அடிப்பவர்கள் நம்பிக்கைக்குத் தகுதியற்றவர்கள், அவர்களை டெல்லியில் இருந்து பிடுங்கி எறிந்துவிடுங்கள்.

விவசாயிகளுக்கு நீதியையும் லாபத்தையும் காங்கிரஸ் வழங்கும் எனப் பதிவிட்டிருந்ததுடன், பிரதமர் மோடி, கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயிகளை ஏமாற்றியுள்ளார் எனவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தப் போராட்டம் தொடர்பாக உளவு துறை கொடுத்த முக்கிய தகவல்களின்படி, விவசாயிகள் போராட்டத்திற்காக பஞ்சாபிலிருந்து மட்டும் 1,500 டிராக்டர்கள் மற்றும் 500 வாகனங்கள் வந்ததன என கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக அடுத்த ஆறு மாதத்திற்குத் தேவையான உணவு, உடை உள்ளிட்ட பொருட்களு டன்தான் அவர்கள் இந்தப் பேரணியை ஆரம்பித்துள்ளனர் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. இந்த டிராக்டர்களை விவசாயிகள் தங்குமிடங்கள் போல மாற்றி உள்ளனர் எனவும் உளவுத் துறை கூறியுள்ளது. மேலும், விவசாயிகள் சிறு குழுக்களாக டெல்லிக்குள் வந்து நகரில் இருக்கும் குருத்வாராக்கள்,



தர்மசாலாக்கள், ஆசிரமங்கள், விருந்தினர் மாளிகைகளில் தங்கவும் பிறகு திடீர் போராட்டங்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர் எனவும் உளவு துறை தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பிரதமர் இல்லம், உள்துறை அமைச்சர் அலுவலகம் போன்ற இடங்களில் போராட்டம் நடக்கலாம் என்பதால் அங்கே பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### 2020 டெல்லி போராட்டம்:

டெல்லியின் எல்லைகளில் 2020ம் ஆண்டு நவம்பரில் விவசாயிகளின் தொடர் போராட்டம் நடைபெற்றது. ஒரு வருடத்திற்கும் மேலாகத் தொடர்ந்த இந்தப் போராட்டத்தில் பல விவசாயிகள் உயிரிழந்தனர். இதேபோன்று மீண்டுமொரு தொடர் போராட்டத்தை பஞ்சாப், ஹரியாணா விவசாயிகள் தற்போது கையில் எடுத்துள்ளனர்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டத்தை தொடர விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

விவசாய விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் உள்ளிட்டப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ராஜஸ்தான், உ.பி., பிஹார், கேரளா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர். சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஜ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட பல விவசாய அமைப்புகள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

2024 மத்திய தேர்தல் நேரத்தில் மத்திய அரசிற்கு தலை வலியாக உருவெடுக்கும் இப்போராட்டத்தை தடுத்து நிறுத்த மத்திய விவசாயத்துறை அமைச்சர் அர்ஜ/ன் முண்டா, மத்திய உணவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்த் ராய் ஆகியோர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். சண்டிகரில் கடந்த 8ஆம் நாள் முதல் கட்டமாக விவசாயிகளுடன் பேச்சைத் தொடங்கினர். அதன்பிறகு பெப்ரவரி 10, 11 மற்றும் 12 ஆகிய நாள்களிலும் பேச்சு தொடர்ந்தது. இதற்கான ஏற்பாடுகளை பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான் செய்திருந்தார்.

இந்த பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கடந்த விவசாயிகள் போராட்டத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ்பெறவும், போலி விதை விற்பனை செய்வோர்



மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது.

பஞ்சாப், ஹரியாணா விவசாயிகள் தீவிரமாகக் கையில் எடுத்துள்ள கோரிக்கைகள் நிறைவேறும் வரை இந்த போராட்டத்தை தொடர அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிகிறது. ஆயினும் தற்போது டெல்லி காவல் துறையினர் இப்போராட்டத்தை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்காக,டெல்லி, பஞ்சாப் மற்றும் ஹரியாணா மாநில எல்லைகளில் கூட்டங்கள் கூடுவதற்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
Milk Drink
Pepsi M
Coca Cola Tin - 250/=

# முல்லையில் இருந்து திருக்கேதீச்சரம் நோக்கி ஆன்மீக அறவழிப் பயணம்



எதிர்வரும் சிவராத்திரி நன்னாளில் திருக்கேதீச்சரத்தை அடையும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மூங்கிலாறு கிராமத்தில் உள்ள சிவாலயத்தில் இருந்து ஆன்மீக பாதயாத்திரை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது..

இந்த பாதயாத்திரையில் அனைவரும் பங்குபற்றி எம்பெருமானின் ஆசிகளை பெற்றுக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்

வாழ்க்கை பாதையில் தடுமாறுபவர்கள், வாழும் வழியகன்று தடுமாறி நிற்பவர்கள், செல்வம் விலகி நின்று வருந்துபவர்கள் சிவாலயம் நோக்கி யாத்திரை சென்றால் நல்வழி கிடைக்கும் என்பது நல்லோர் வாக்கு... இந்த ஜென்மத்தில் செய்த பாவங்களை மட்டுமல்லாமல் முன்ஜென்ம பாவங்களையும் பாத யாத்திரை செய்வதால் உண்டாகும் புண்ணியம் நீக்கிவிடும் என்பர்..

எம் அனைவரது பாதங்களும் கேதீச்சரத்தை நோக்கி நடக்கட்டும்.. எம் பாவங்களும், ஜென்மங்களால் உண்டான சாபங்களும் நீங்கி வாழ்க்கை வளம் பெறட்டும் என்று இந்த பாத யாத்திரையில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

மேலதிக தகவல்களுக்கு 0770489305, 0774675795 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரிக் விடுத்துள்ளனர் ஏற்பாட்டாளர்கள்.

குறித்த யாத்திரை தொடர்பான கால அட்டவணையும் அறியத்தந்துள்ளனர் சிலவேளைகளில் சிறிய மாறுதல்கள் ஏற்படலாம் எனவும் அதற்கமைய இன்று (திங்கட்கிழமை) மாலை 3.30 மணிக்கு மூங்கிலாறு சிவன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஆன்மீக யாத்திரை இரவு பரந்தனில் ஓய்வு நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 5 மணிக்குப் பரந்தனில் இருந்து புறப்பட்டு மதியம் முறிகண்டி பிள்ளையார் கோயிலை அடைதல். மதிய உணவு மாலை யாத்திரையைத் தொடர்ந்து வன்னேரியை அடைந்து அங்கே தங்குதல். 06.03.2024 காலை 5.00 மணிக்கு வன்னேரியில் இருந்து புறப்பட்டு மதியம் முழங்காவிலை அடைதல் மதிய உணவு பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இரவு இலுப்பைக்கடவையில் இரவு தங்குதல் 07.03.2024 காலை இலுப்பைக்கடவையில் இருந்து 5 மணிக்கு திருக்கேதீச்சரம் நோக்கிப் புறப்பட்டு இரவு கோயிலை அடைதல் என குறித்த யாத்திரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# புலனுறுப்புகளால் உலக சாதனை படைத்த பர்ஷானுக்கு முஷாரப் எம்.பிக்கு கௌரவம்

(பாறுக் ஷிஹான்)



புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதை சேர்ந்த எம். எஸ். எம். பர்சான் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம்.எம்.முஷாரப்பால் அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை தனியார் விருந்தினர் விடுதியில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்ததாக உலகின் 26 நாடுகளில் வியாபித்திருக்கும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் முன்னிலையில் எம்எஸ்எம் பர்சானினால் புலனுறுப்புகளால் புரியப்பட்ட சாதனைகளை உலக சாதனையாளர்களை பதியும் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருந்தார். இவர் கண், காது, மூக்கு , வாய் ஆகிய புலனுறுப்புகளால் அபார சாதனையை மேற்கொண்டு பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்துவதுடன் காதினால் பலூனை ஊதி உடைத்தல் , கண்களினால் இரும்பு கம்பியை வளைத்தல் , பல்லால் 5.7 கிலோ கிறாம் பாரத்தை சங்கிளிகளின் உதவியுடன் உயர்த்துதல் ,குளிர்பானத்தை முக்குத்துவாரத்தினூடாக அருந்துதல் , மூக்கு துவாரத்தினூடாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், பல்லினால் தேங்காய் உரித்தல் போன்ற செயற்பாடுகளை 12 நிமிடத்தில் மேற்கொண்டு சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்

சர்வதேசம் சென்று சோழன் உலக சாதனை புத்தகத்தில் பெயரை பதித்த சாய்ந்தமருது பர்ஷான் இச் சாதனை மூலம் தாய் நாட்டுக்கும் , பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்ததையிட்டு பாராளுமன்ற உறுப்பினருடன் கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் எம்.ஐ.ரனூஸ், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.எச். அப்துல் றஹீம், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் ஜாஹிர், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்களான எம்.எஸ்.முபாரக், சதக்கத்துல்லா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரதேச இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கௌரவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

(05)



## விபத்தில்.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் தாவடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று மாலை 6.15 மணியளவில் தாவடி சந்தியில் மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## எந்தவொரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுசெய்யப்பட்ட - சிங்களவர்களுக்கான சிங்கள அரசாங்கம்' எனும் இனவாதப்போக்கிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்துவந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை அடையாளம் காண்பது தொடர்பில் ஜனாதிபதி எம்முடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை முன்னெடுத்தார். இருப்பினும் அவை கலந்துரையாடல் என்ற எல்லையை தாண்டவில்லை. மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்ட அல்லது மீள வழங்கப்படவேண்டிய அதிகாரங்களைக் கண்டறிவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக இப்பணிகளை முன்னெடுப்பதற்கு விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமிப்பதாகவும், மாகாண சபைகளுக்கு அவசியமான சட்டங்களை வகுப்பதாகவும் ஜனாதிபதி உத்தரவாதம் அளித்தார்.

எது எவ்வாறிருப்பினும் தற்போது ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கருத்து அரசியல் சார்ந்த தன்மையைக் கொண்டிருக்கின்றது. அவர் ஜனாதிபதி தேர்தலின்போது எமது மக்களில் குறிப்பிட்டதொரு தரப்பினரிடமிருந்து ஆதரவை எதிர்பார்க்கின்றார். ஆனால் வெற்றி பெற்றதன் பின்னர் அவர் கொண்டிருக்கும் கடப்பாட்டை மறந்துவிடுவார். நான் தற்போதைய ஜனாதிபதியை மாத்திரம் குறைகூறவில்லை. முன்னைய ஜனாதிபதிகளும் இதனையே செய்தனர். அவர்களுக்கு தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் வேண்டும்.

அதனைத் தாண்டி தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதில் அவர்களுக்கு நாட்டமில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இதிலிருந்து வேறுபட்டவர் என்பதை நான் கூறியாகவேண்டும். அவரால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு வரைபு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கட்சியினால் பாராளுமன்றத்தில் வைத்து எரிக்கப்பட்டது.

பொலிஸ் அதிகார விவகாரத்தில் தமிழ் மக்கள் அவர்களுக்குள் பிளவுபட வேண்டுமென ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார். மாகாண சபைகளுக்கான வரையறுக்கப்பட்ட அளவிலான பொலிஸ் அதிகாரம் அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டம் இறையாண்மையுடைய இரு தேசங்களுக்கு இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டின் விளைவாகும். எனவே ஏற்கனவே சட்டத்தில் இருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி எவ்வாறு பேரம் பேசுகின்றார் எனப் புரியவில்லை.

என்னைப் பொறுத்தமட்டில் ஜனாதிபதியின் கருத்து நேர்மையானதல்ல. மாறாக அவருக்கு ஜெனிவாவில் சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்த வேண்டும். அதேபோன்று ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் வேண்டும். அதனைத் தாண்டி பொலிஸ் அதிகாரங்களுடனோ அல்லது பொலிஸ் அதிகாரம் இன்றியோ அவர் எந்தவொரு அரசியல் உரிமையையும் தமிழர்களுக்கு வழங்கமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

## நாளாந்தம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வளவு தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அரசாங்கம் எப்போதும் மக்கள் மீது சுமைகளை ஏற்றி ஆட்சியாளர்கள் மனிதாபிமானமற்ற வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அதிநவீன மூலோபாய திட்டத்தின் மூலம் டொலர்களை கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்தப்படும்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 117 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, ஓயாஹவ, ராவணவெவ கனிஷ்ட கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் ஞாயிற்றுக்கிழமை (03) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். நடன மற்றும் அரங்கேற்றங்கள் குழுவுக்குத் தேவையான அணிகலன்களைப் பெற்றுக் கொள்ள ஒரு இலட்சம் ரூபா நன்கொடையும் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

வங்குரோத்து என்ற இந்த மரண வலையில் இருந்து வெளியேற பொருளாதார

13ஆம் பக்கம் பார்க்க...



காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் விவாகரத்துச் சட்ட உத்தேச மறுசீரமைப்பு-புலமைசார் செயலமர்வு தென்கிழக்கு பல்கலையில்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தால் முஸ்லிம் விவாகரத்துச் சட்ட உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வு சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரை பீடத்தின் கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலின் கீழ் பீடாதிபதி அஷ்ஷெய்ஹ் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இடம்பெற்றது. மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இப் புலமைசார் செயலமர்வில் பெண்களின் திருமண வயதெல்லை, வலியின் தேவைப்பாடு, வலியின் ஒப்புதல், திருணமத்திற்கான பெண்ணின் சம்மதம், காழிகளின் தகைமை, பெண்காழிகளின் நியமனம், திருமணப் பதிவு, தாபரிப்பு மற்றும் பலதார மணம் போன்ற முக்கிய விடயப் பரப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. மேலும், பீடாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட 'இலங்கை முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பு குறித்த முஸ்லிம் சமூகத்தின் கருத்துநிலை' எனும் ஆய்வின் முடிவுகளும் இவ்வமர்வில் முன்வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களான பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.எம் மஸாஹிர், பேராசிரியர் கலாநிதி ஆர்.ஏ. சர்ஜுன், கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ், கலாநிதி எப்.எச்.ஏ. ஷிப்லி மற்றும் உஸ்தாத் மன்ஸுர், கலாநிதி. ஷாமிலா தாவூத், கலாநிதி ஷிஹான் தாவூத், டாக்டர் வை.எல்.எம்.யூஸுப், எம்.எம்.எம். சாபிர், கலாநிதி எம்.பீ. பௌஸுல், கலாநிதி யூ.எல்.அஸ்லம் ஆகியோருடன் சட்ட அறிஞர்களான கலாநிதி ஏ.எல்.கபூர், எம்.எச்.எம். றுஸ்தி, எம்.ஏ.சீ.எம். உவைஸ், ஏ.சீ.எப். ஹுஸ்னா, அஷ்ஷெய்ஹ் டீ.எம்.எம். அன்ஸார், ஜெ. றாஷி முஹம்மத் போன்றோர் இதில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற முஸ்லிம் அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள், முஸ்லிம் சமூகத்தலைவர்கள், பெண் ஆர்வலர்கள், துறைசார் நிபுணர்கள் போன்றோர் கலந்து சிறப்பித்ததுடன், இதில் பார்வையாளர்கள் தங்களின் சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் வளவாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் ஆவணமாக்கப்பட்டு வெளியிடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என பீடாதிபதி குறிப்பிட்டார். இவ்விடயப்பரப்புகள் தொடர்பாக மற்றுமொரு அமர்வினை ஒழுங்குசெய்யுமாறு இவ்வமர்வில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (05)

# போதை ஒழிப்பு நடைபவணி கிண்ணியாவில் சனி நடந்தது



'ஒரே கிராமம் ஒரே நாடு' என்ற தொனிப்பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்ற செயல் திட்டத்திற்கு அமைவாக சனிக்கிழமை கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குப்பட்ட பகுதிகளில் போதை ஒழிப்பு நடைபவனி கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம் கனியின் பங்களிப்புடன் இடம்பெற்றது. போதை ஒழிப்பு தொடர்பான பதாகைகளுடன் கிண்ணியா பிரதான வீதி ஊடாக ஊர்வலமாக நோவா விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்தனர். நோவா விளையாட்டு கழகத்தின் 35 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது வைத்தியர் எம்.ஏ சமீம், நோவா விளையாட்டு கழகம் மற்றும் ஏனைய விளையாட்டு கழக வீரர்களும் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தககது. (05)

# உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்களின் ஒன்றுகூடல் தென்கிழக்குப் பல்கலையில்



(நூருல் ஹுதா உமர்)

இலங்கைத் துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழு எனப்படும் இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் பணிப்பாளர்களின் 472 ஆவது ஒன்றுகூடல் தென்கிழக்கு பல்கலைகழகத்தில் சனிக்கிழமை சிவிசிடி இன் தலைவர் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சஞ்சீவணி கினிகதர தலைமையில் இடம்பெற்றது.

இன்றைய ஒன்றுகூடலின் போது பல்கலைக்கழகங்களில் காணப்படும் உள்ளக குறைபாடுகள் அவைகளை தீர்த்து வைப்பதில் கையாளப்படவேண்டிய வழிமுறைகள் முன்னெடுக்கப்படவேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டு தீர்வுகள் எட்டப்பட்டன.

இந்நிகழ்வின்போது அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான வீடியோ ஆவணம் ஒன்று பங்குகொண்டிருந்த உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு காண்பிக்கப்பட்டு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

அதேவேளை குறித்த இடங்கள் சிலவற்றையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இங்கு கலந்து கொண்ட அதிதிகளால், இவ்வாறான அனர்த்தங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் கையாளப்படவேண்டிய நடைமுறைகள் பற்றி கருத்துக்கள் பரிமாறப்பட்ட அதேவேளை தாங்கள் முடிந்த உதவிகளை எதிர்காலத்தில் செய்வதாகவும் வாக்குறுதியளிக்கப்பட்டது. (05)

# விளினயடி 03 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான முஸ்லிம் காங்கிரஸ் கிளை சீரமைப்புக்கூட்டம்

(தில்சாத் பர்வீஸ்)

கடந்த சனிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், அரசியல் அதி உயர் பீட உறுப்பினர் ஆதம் பாவா, சம்மாந்துறை மத்திய குழு செயலாளர் எம்.ஜே.எம்.அஸாறுடீன், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ் .நளீம், சம்மாந்துறை விளினயடி வட்டார வேட்பாளர் எம் .முஸ்தபா சாஹுபீர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர .(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிண்ணியா மீனவர் பிரச்சினைகள் பற்றி அமைச்சர் டக்ளஸுடன் கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியாவுக்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுடனான சந்திப்பில் ஈடுபட்டார். இந்தச் சந்திப்பானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் அழைப்பின் பேரில் இடம் பெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய சனிக்கிழமை அமைச்சர் கிண்ணியா பிரதேசத்துக்கு சென்று மீனவர்களின் பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டறிந்தார்.

இச் சந்திப்பில் திருகோணமலை கடற்தொழில் திணைக்கள உதவி பணிப்பாளர் இஷார தரிந்து கணகாணம்கே, சுருக்கு வலை சங்க தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் சேருவில தொகுதி அமைப்பாளருமான சரத் லோரன்ஸ், முன்னாள் நகர சபை உறுப்பினர் கலிபதுள்ளாஹ், கிண்ணியா மீனவ மகா சங்க தலைவர் ரிஜால் பாயிஸ், பைஷரூஸ், ஆரிஸ் உள்ளிட்ட மீனவ சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

# சிநேகபூர்வ கடினபந்து ரி20 கிரிக்கெட் போட்டி விவேகானந்தா விளையாட்டுக் கழகம் வெற்றி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழகத்திற்கும் சாய்ந்தமருது சன் பிளவர் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் காரைதீவு விபுலானந்தா விளையாட்டு மைதானத்தில் சிநேகபூர்வ 20இற்கு 20 கிறிக்கட் போட்டியொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

முதலில் துடுப்படுத்தாடிய காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழகம் 20 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது சன் பிளவர் விளையாட்டுக்கழகம் 19.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தின் சார்பில் சஞ்சேய் துடுப்பாட்டத்தில் 4 நான்கு ஓட்டம் 3 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 60 ஓட்டங்களையும் , பந்து வீச்சில் 5 விக்கட்டுக்களையும் கைப்பற்றி விவேகானந்தாவின் வெற்றிக்கு வழிவகுத்தார். (05)

# கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவர்

## முஷாரப் எம்.பி. நம்பிக்கை




(பாறுக் ஷிஹான்)

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு - பல்வேறு கேள்விகளுக்கும் பதில் வழங்கினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் இடம பெற்று வரும் நிருவாக சமநிலையற்ற தன்மைகள் தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் கேள்விகள் எழுப்பினர்.

கிழக்கு மாகாணத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் எந்த பதவி நிலையிலும் எவரும் இல்லை என்பதையும், பல்வேறு முக்கிய பதவி நிலைகளுக்கு முஸ்லிம் நிருவாகிகள் உள்ளவாங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டிய ஊடகவியலாளர்கள், 'இதற்கு ஏன் நீங்கள் நடவடிக்கை மேற் கொள்ளவில்லை' என்று கேட்டிருந்தனர்.இது தவிர அமைச்சுக்களின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களாகவும் திணைக்களங்களின் தலைவர்களாகவும் முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் பலரும் நியமிக்கப்படுவதற்கான செயற்பாடுகளில் நாங்கள் ஈடுபட்டுள்ளதுடன் அவ்விடயம் விரைவில் நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்திற்கான புதிய ஆளுநர் நியமிக்கபட்டபோது இனவாதக் கருத்துடன் பலரும் பேச வெளிக்கிட்ட நிலையில், நாமும் அந்தக்கருத்துக்களுடன் செல்லவில்லை. மாறாக கிழக்கைக் கட்டியெழுப்பக்கூடிய துடிப்புள்ள வேகமான செயல்திறன் கொண்ட ஆளுநரே நமக்குத் தேவை என்கின்ற நிலைப்பாட்டுடன் நாம் இருந்தோம்.

அந்த வகையில் திறமையான ஆளுநர் நமக்குக் கிடைத்திருக்கின்றார். இரவு பகலாக அர்ப்பணிப்புடன் செயல்படுவதைக் காண்கின்றோம்.

அந்த வகையில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களாக முஸ்லிம் நிர்வாக அதிகாரிகள் மிக விரைவாக நியமிக்கப்படுவார்கள் என மிகவும் உறுதியாக அறிகின்றேன். அதற்கான முழுமையான முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளதையும் முசாரப் எம்.பி. உறுதியாக தெரிவித்தார்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன் கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் எம்.ஐ.ரனூஸ், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் ஜாஹிர், பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்களான எம்.எஸ்.முபாரக், சதக்கத்துல்லா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரதேச இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

# ஹிருணிகாவின் மனிதாபிமானமற்ற கருத்துக்கு ஐ.தே.க. பொத்துவில் அமைப்பாளர் கண்டனம்



(கே எ ஹமீட்)

இஸ்ரேல் - பலஸ்தீன் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனிய குழந்தைகளுக்காக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்துள்ள நிதியம் தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவுத் தலைவி ஹிருணிகா பிரேமசந்திர - மனிதாபிமானமற்ற கருத்துக்களைக் கூறி விமர்சித்து பேசியிருந்தமைக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம்லெப்பை கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிதியம் தொடர்பில் - நேஊடகங்களிடம் ஹிருணிகா பிரேமசந்திர கருத்துக் கூறியிருந்தார்.

அதனைக் கண்டித்து லொயிட்ஸ் ஆதம்லெப்பை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றில் -

இனவாத முகம்கொண்ட சஜித் பிரேமதாஸவின் அணியில் இருக்கும் ஹிருணிகா - இவ்வாறு பேசியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் -

இஸ்ரேல் - பலஸ்தீன் யுத்தத்தால் கொடூரமாக பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு, தனியாரிடமிருந்து பணம் சேகரித்து வழங்கும் பொருட்டு, நிதியமொன்றை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். இந்த நிதியத்துக்கு அரசாங்கமும் 01 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவுள்ளது.

இந்நிதியத்துக்கு பல்வேறு தனியார் தரப்புக்களிடமிருந்தும் நிதியுதவிகள் கிடைத்து வருகின்றன. இப்படியான ஜனாதிபதியின் திட்டத்தை ஹிருனிகா போன்ற மனதாபிமானமற்ற இனவாதிகளுக்கு தாங்க முடியாதுள்ளது.

நாடு அதள பாதாளத்தினுள் சென்ற காலத்தில் - நாட்டைப் பாரமெடுக்கும்படி கேட்கப்பட்டபோது, பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடிய சஜித் பிரேமதாஸவின் அணியில் இருக்கும் ஹிருணிகா - இவ்வாறு பேசியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தனி நபராக இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு - நாட்டு மக்களைக் காப்பாற்ற இவர்கள் சொல்லித்தர வேண்டியதில்லை.

வாயால் அரசியல் செய்யும் ஐக்கிய மக்கள் சக்தியினரிடமிருந்தும், பேஸ்புக் அரசியல் செய்யும் ஜேவிபியினரிடமிருந்தும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக சஜித் பிரேமதாஸவை இஸ்லாமிய மக்கள் புரிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாகும்,

ஏற்கனவே தென்கிழக்கு பல்கலைலக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் தனது இனவாத முகத்தைக் காட்டிய சஜித், இப்போது ஹிருணிகா மூலம் தனது விஷ்வரூபத்தை வெளிப்படுத்துகிறார்.

கோட்டாவின் ஆட்சிக் காலத்தில் ஜனாஷா எரிப்புக்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய நாலக்க கொடஹேவா மற்றும் டொக்டர் ஷாபி மீது கருக்கலைப்பு பழி சுமத்துவதில் பிரதானியாக செயற்பட்ட சன்ன ஜயசுமன போன்ற இனவாதக் கூட்டம் சஜித்திடம் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இது தெரிந்தும் ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் இதுவரை ஓர் எதிர்ப்பு அறிக்கை கூட வெளியிடாமல் முஸ்லிம் தலைவர்களாக உலா வருகின்றனர். வெறுமனே பலஸ்தீன சால்வை அணிந்து நாடாளுமன்றம் வந்து ஊடகங்களுக்கு படம் காட்டும் போலித்தனமான ஹக்கீம், ரிஷாத் போன்றோரிடமும் மக்கள் விளிப்பாக இருக்க வேண்டும் என்றும் லொயிட்ஸ் ஆதம்லெப்பை தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மக்களுக்குக் கையளிப்பு







(அஸ்ஹர் இப்றாஹிம்)

பலேகம பகுதி மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமியின் கோரிக்கைக்கு அமைவாக குவைத் நாட்டின் அல் நூர் தொண்டர் நிறுவனத்தின் ஊடாக பத்து மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் 'அனைவருக்கும் சுத்தமான குடிநீர் ' என்ற எண்ணக்கருவுக்கு அமைவாக அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு சிறந்த முறையில் குடிநீர் திட்டம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அல்நூர் தொண்டர் நிறுவனத்தின் தலைவர் முஹம்மட் அலியார் , பலேகம பள்ளிவாசல் தலைவர், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஊர் பெரியவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(05)

# தேசிய ரீதியிலான சமூக விஞ்ஞானப் போட்டியில் அல் முனீறா பெண்கள் பாடசாலையும் சாதனை



(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை அல் முனீறா பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவிகள், அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் 04 ஆம் இடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

தரம் 11 பிரிவில் - அனீஸ் அலி அப்றோஸ் சஹ்றானி முதலாவது இடத்தினையும், தரம் 08 பிரிவில் ஹனீஸ் ஆய்ஷா அனீகா இரண்டாவது இடத்தினையும் பெற்றுள்ளதோடு, தரம் 06 பிரிவில் றஸ/ல்தீன் ஆறா அதுன் சாறா 04ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

2023ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்படி சமூக விஞ்ஞானப் போட்டியின் முடிவுகள் அண்மையில் வெளியாகின.

இதனையடுத்து வெற்றியீட்டிய மாணவிகளை பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வொன்று அண்மையில் பாடசாலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சமூக விஞ்ஞான போட்டிகள் - கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டங்களில், தரம் 06 தொடக்கம் தரம் 11 வரையிலான பிரிவுகளுக்கு நடைபெறுகின்றன.

கோட்ட மட்டத்திலிருந்து ஒவ்வொரு மட்டத்திலும் வெற்றி பெறும் மாணவர்கள் - இறுதியில் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்கின்றனர்.(05)



# கற்பிட்டி பிரதேச செயலகத்துக்கு புதிய செயலராக இந்திக ஜயசிங்க

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக பதுளையைச் சேர்ந்த சமில இந்திக ஜயசிங்க மார்ச் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வெள்ளிக்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் உத்தியோகத்தர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். (05)

# மருதமுனையில் இரத்ததான முகாம் முஷாரப் எம்.பியும் தானம் வழங்கல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை 'மனாரியன்ஸ் அமைப்பு கல்முனை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி பெண்கள் பிரிவு வளாகத்தில் அமைப்பின் தலைவர் எம்.எம்.பஸீல் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் 1999 ஆம் ஆண்டு சாதாரண தரம் கல்வி கற்ற மாணவர்களில் ஒருவரான திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டதுடன் இரத்தம் வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதில் கல்முனை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி வைத்தியர் பி.எம். கவிதா, பாடசாலையில் அதிபர் ஐ.உபைதுல்லா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(05)

# வடமாகாண வேகநடைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி முதலிடம்

## பெண்கள் பிரிவில் யாழ். மாவட்டம் வெற்றி



வடமாகாண வேக நடை போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி முதலிடமும் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்டம் முதல் இடத்தையும் பெற்றுள்ளது.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட மாகாண ரீதியான வேக நடை போட்டி கிளிநொச்சியில் நடைபெற்றது.

ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஆண்,பெண் சேர்ந்து 31 பேர் கலந்துகொண்ட 20 கிலோ மீற்றர் தூர வேக நடை போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த கண்ணன் கலையரசன் சுமார் 2.15.08 நேரத்தில் நடந்து முடித்துள்ளார். இதேபோன்று பெண்கள் பிரிவில் யாழ் மாவட்டத்தை சேர்ந்த ரவிக்குமார் கௌசிகா சுமார் 2.18.59 நேரத்தில் நடந்து முடித்துள்ளார்கள்.

2013, 2014 ஆண்டுகளில் வட மாகாண ரீதியான வேக நடை போட்டியில் ஆண்கள் பிரிவில் 1.52 ஒரு மணித்தியாலத்தியாலம் ஐம்பத்து இரண்டு நிமிடத்திலும் பெண்கள் பிரிவில் இரண்டு மணித்தியாலம் 11 நிமிடத்தில் நடந்து முடிக்கப்பட்ட வேகத்தை 2024 ஆண்டு வேக நடை போட்டியாளர்களால் முறியடிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

(05-113)

# வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூஜைக்காக நீதிமன்றை நாடும் நிர்வாகம்

*வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய சிவராத்திரி பூஜை வழிபாடுகளின் போது மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் சட்டத்தரணி ஊடாக வவுனியா நீதிமன்றத்திடம் அனுமதி கோரி மனுத் தாக்கல் செய்துள்ளனர்.*

*வவுனியா வடக்கு, ஒலுமடு வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் தொல்பொருட் சின்னங்களுக்கு சேதம் ஏற்படுத்தாத வகையில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.*

*அதனடிப்படையில் அங்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் கடந்த மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் உள்ள தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின்*

*தலைவர் மெதகொட அபய திஸ்ஸ தேரர், சர்ச்சைக்குரிய முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் உள்ளிட்ட குழுவினர் இராணுவ பாதுகாப்புடன் வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டு இருந்தனர்.*

*எதிர்வரும் 8 ஆம் திகதி சிவராத்திரி விரதம் அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில் குருந்தூர் மலை விகாராதிபதி சமூக வலைத்தளத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி பௌத்த இடம் நெடுங்கேணியில் ஆக்கிரமிக்கப்படவுள்ளது.*

*அதனைப் பாதுகாக்க அணிதிரள்வோம் என பதிவு செய்துள்ளார்.*

*ஆனால், ஆலய நிர்வாகத்தினர் வழமை போன்று சிவராத்திரி பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்பாடுகளை செய்துள்ளதுடன், வெளிச்சத்திற்காக மின்பிறப்பாக்கி பயன்படுத்துவதாக இருந்தால் நீதிமன்றில் அனுமதியைப் பெறுமாறு நெடுங்கேணி பொலிஸார் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.*

*இதனடிப்படையில் ஆலய நிர்வாகத்தினர் மின்பிறப்பாக்கி பயன்படுத்த அனுமதி கோரி சட்டத்தரணி ஊடாக கடந்த வியாழக்கிழமை மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர். இது தொடர்பில் ஆராய்ந்து, இன்று (திங்கட்கிழமை) முடிவை அறிவிப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.*

*(05-100)*

காலைக்கதிர் Kalaikkathir

# ஆலங்குடாப் பாதை சீரமைப்பு மீண்டும் சனியன்று தொடக்கம்

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குப்பட்ட ஆலங்குடா பாதையின் புனரமைப்பு வேலைத்திட்டத்தை மீண்டும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வேலைலத்திட்டங்களின் ஒரு தொகுதியான 2.8 கி.மீ (ஆலங்குடா சந்தியிலிருந்து கடற்கரை வரையிலான) பாதையின் வேலைத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் அருள்தாசன் மற்றும் அவரது காரியாலய அதிகாரிகள், நுரைச்சோலை வட்டார இணைப்பாளர் என். எம். ஹஸீப், ஆலங்குடா இணைப்பாளர் பஸ்லி, ஏத்தாலை இணைப்பாளர் அஸ்வர் அலி, கல்பிட்டி இணைப்பாளர் யூ.எம். ஜின்னா, ஆலங்குடா பிரதேச பிரபல வர்த்தகர் ரியாஸ் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வு ஆலங்குடா இணைப்பாளர் பஸ்லி தலைமையில் கிராம பள்ளிவாசல் தலைமைகள், பாடசாலை நிர்வாகம், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தயோகத்தர், சமுர்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம பிரமுகர்களால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் - தான் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை ஆலங்குடா பிரதேசத்திற்கு சேவையாற்றுவதற்கு மட்டுமல்ல. முழு புத்தளம் மாவட்டத்திற்கும் சேவையாற்றுவதற்கே தெரிவு செய்யப்பட்டேன். அப்போது எனக்கு கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்தும், அமைச்சரவையிலிருந்து கிடைக்கப் பெற்ற வேலைத்திட்டங்களிலிருந்தும் புத்தளம் மாவட்டத்திற்கு பல பாதை அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்தேன். சில பாதைகளின் வேலைத்திட்டங்கள் நிறைவடைந்தாலும் பல பாதைகளின் வேலைத்திட்டங்கள் அரசாங்கத்தின் பொருளாதார தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்டன.



தற்போது இடைநிறுத்தப்பட்ட பாதைகள் மற்றும் பாலங்களின் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில்தான் இன்று ஆலங்குடா பாதையின் வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றது. முதலைப்பாளி, முள்ளிபுரம், கரைத்தீவு மற்றும் மணல்குன்று பாதைகளின் வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனக் குறிப்பிட்டார். (05)

## முசலி தெற்கு வியாயடிக்குளம் நீர்த்தேக்கம் புனரமைப்பு சம்பந்தமான கள மேற்பார்வை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

முசலி தெற்கு வியாயடிக்குளம் (பெரிய கட்டு) நீர்த் தேக்கம் புனர் நிர்மானம் தொடர்பான கள மேற்பார்வை அண்மையில் இடம்பெற்றது.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கிராமிய பொருளாதார ராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், ஐந்து விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் முசலி தெற்கு விவசாய சமாசத்தின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது அந்தப் பிதேசத்தில் சுமார் 2000 ஏக்கள் காணிகள் நெற் பயிர்ச் செய்கை மேற் கொள்வதாகவும், ஏழு பெரிய நீர்ப்பாசன குளங்களும் பதின்மூன்று சிறிய நீர்ப்பாசன குளங்களும் இருக்கின்றன எனவும், இரண்டாவது போகம் தண்ணீருக்கு பயந்த கடினமான சூழ்நிலையிலேயே தாம் மேற்கொள்வதாகவும், இந்தப் பிரதேச மக்கள் முழுமையாக விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர் எனவும், கடந்த பத்து வருடங்களாக வியாயடிக் குளம், வாய்க்கால்கள், விவசாய வீதிகள் சிறிய,பெரிய குளங்கள் எவையுமே திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் ராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

குறைகளைக் கேட்டறிந்த ராஜாங்க அமைச்சர் இவ்வருடம் உங்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய வகையில் வேலைகளை செய்து தருவதாகவும் வாக்குறுதி அளித்தார். (05)

## அம்பாந்தோட்டை பாடசாலை மாணவர்களுக்கு மனித – யானை மோதல் பற்றிய விழிப்புணர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹெல்ப் ஸ்ரீலங்கா நிறுவனம் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து நாட்டின் பல பகுதிகளிலும் அதிகரித்து வரும் மனித யானை மோதல் மற்றும் அது இலங்கையின் உள்ளூர் சமூகத்தின் மீதான தாக்கம் குறித்த செயலமர்வை நடத்தியது.

இந்தச் செயலமர்வில் அம்பாந்தோட்டை சூரியவெள , ரன்முதுவெள மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 350 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள காப்புறுதித் துறை அதிகாரி சீ.பீ.என். சுரவீர தலைமையில் ஹெல்ப் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் கீழ் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. (05)

## கிண்ணியாவில் போதைப் பொருளுக்கு எதிர்ப்புதெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்





கிண்ணியாவில் போதை பொருளுக்கான எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலம் கிண்ணியா பழைய வைத்தியசாலை சந்தியிலிருந்து ஆரம்பித்து ஓ ரீகன் பாலம் ஊடாக கிண்ணிய புகாரியடி சந்தி வரை இடம் பெற்றது .

நோவா விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போதை ஒழிப்பு ஊர்வலத்தில்,

வைத்தியர் தாய் சேய் நல வைத்திய அதிகாரி எம்.எச்.சம். சமீம் திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச் எம் கனி.

எம் எம் மஹ்தி, முன்னாள் கிண்ணியா நகர சபை உறுப்பினர் உட்பட சுமார் பதினாறுக்கும் மேற்பட்ட விளையாட்டு கழகங்கள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (05)

# சமுர்த்தி திணைக்களத்தால் மன்னாரில் வீடுகள் கையளிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சமுர்த்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப் படும் ரன்விமன வீட்டு திட்ட செயற்பாட்டின் மூலம் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச சபைக்கும் மூன்று வீடுகள் வீதம் ஐந்து பிரதேச சபைகளுக்கு 15 வீடுகள் நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட பயனாளிகளின் உதவிகளுடன் 15 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பட்டித்தோட்ட கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனின் தலைமையில் உரிய பயனாளியிடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் ஐ.அலியார் , மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## நாளாந்தம்.....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி ஏற்பட வேண்டும். அதற்காக உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நேரத்தில் அரசாங்கம் பொருளாதாரத்தை சுருக்கி வருகிறது. மின்கட்டண அதிகரிப்பால் புதிய முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வரமாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

## நம்பிக்கையில்லாத்....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார். ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கொண்டுவரப்படும் இந்தப் பிரேரணைக்கு சுதந்திர மக்கள் சபை, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, சம்பிக்க ரணவக்க ஆகியோர் உட்பட பல எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க ஏற்கனவே முடிவு செய்துள்ளன.

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்புக்கு நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பெரும்பான்மை ஆதரவு இருந்து வரும் நிலையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படும் என்றே உறுதியாக எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூ-லத்திற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளை மேற்கொள்ளாது ஆளும் தரப்பு அதனைச் சட்டமாக்கியதைச் சுட்டிக்காட்டிய பின்னரும் சபாநாயகர் அந்தச் சட்டத்தில கையெழுத்திட்-டு அதனைச் சட்டபூர்வமானதாக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுகின்றது

## விவசாயத்....

(முதலாம் ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தினார்.

அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய கீழ் மட்டத்தில் அமுல்படுத்தக்கூடிய வகையில் இந்த தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இதனுடன் தொடர்புள்ள 26 திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

அரச மற்றும் தனியார் துறைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர விவசாய தொழில் முயற்சியாளர்களை உள்ளடக்கிய கூட்டு வேலைத்திட்டத்தின் மூலம் இந்த சவாலை வெற்றிகொள்ள முடியும் எனவும் விவசாய ஏற்றுமதி பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதே தமது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் குறித்து சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க, ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன், இத்திட்டத்தின் அமுலாக்கமானது விவசாயத்தை வர்த்தக மட்டத்திற்கு கொண்டுவருதல், விவசாய உயிர்ப்பல்வகையைப் பாதுகாப்பது தொடர்பில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களை ஊக்குவித்தல் என்பவற்றுக்காக அந்தக் காணிகளின் உரிமைகளை வழங்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பல்வேறு தடைகள் மற்றும் வரம்புகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார். அத்துடன், 25 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனாநாயக்க, விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 25 மில்லியன் ஷரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட்ட அனைத்து பிரதேச செயலகங்களிலிருந்தும் திட்ட முன்மொழிவுகள் ஏற்கனவே கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் சமன் தர்ஷன படிகோரள, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கே.என். குமாரி சோமரத்ன, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்ம ஸ்ரீ குமாரதுங்க, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகள் மற்றும் டட்லி சிறிசேன உள்ளிட்ட விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறை பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## கறுப்புக்...

(முதலாம் ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளால் அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த வகையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து புறப்பட்ட படகுகள் இலங்கையின் கடல் எல்லையில் நின்று போராடினர்.

இதேவேளை கடற்றொழிலாளர்களின் போராட்டம் சர்வதேச கடற்பரப்பில் செல்லக்கூடாது என இலங்கை கடற்படை எச்சரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## சாந்தனின்...

(முதலாம் ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக் கைதியான சாந்தன் தண்டனை முடிந்து நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டபோதும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அங்கு அவர் கடும் சுகவீனமுற்றார். அவரை இலங்கைக்கு அனுப்புவதற்கான கடும் போராட்டங்களுக்குப் பின்னர், இலங்கை அரசின் அனுமதியுடன் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவர் திருப்பி அனுப்பப்பட இருந்த தருணத்தில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

அவரது புகழுடல் வெள்ளிக்கிழமை கொழும்பு கட்டுநாயக்காவை வந்தடைந்தது. நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட புகழுடல் அங்கு உடற்கூறாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இதையடுத்து அங்கிருந்து புறப்பட்ட புகழுடல் பேழை அடங்கிய வாகனம் நேற்றுக் காலை வவுயாவை வந்தடைந்தது.







வவுனியாவில் இருந்து சாந்தனுக்குத் தமிழ் மக்கள் தமது அங்சலிகளைச் செலுத்தத் தொடங்கினர். முக்கிய சந்திகளில் எல்லாம் மக்கள் கூடி சாந்தனின் புகழுடல் அடங்கிய பேழைக்கு மலரஞ்சலி செலுத்தி தமது இறுதி மரியாதையை வழங்கினர்.

கிளிநொச்சியில் புகழுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் புகழுடலுக்கு சிவப்பு மஞ்சள் கொடி போர்த்தி மரியாதை செலுத்தினார். அங்கிருந்து புறப்பட்ட வாகனம் கொடிகாமம் வழியாக வடமராட்சியை வந்தடைந்தது. வழி நெடுக மக்கள் வீதிகளில்கூடி சாந்தனுக்குத் தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

வல்வெட்டித்துறை, தீருவிலில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட புகழுடல் பின்னர் மாலை இருட்டுகிற நேரம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டது. இதன்போது அனைவர் இதயங்களையும் கனக்கச் செய்யும் சம்பவம் இடம்பெற்றது.

“அண்ணா வாறார் யாரும் அழ வேண்டாம்” என கூறிய சாந்தனுடைய சகோதரி ஆளாத்தி எடுத்து வரவேற்றார். கூடியிருந்த அனைவரும் அழுகையைக் கட்டுப்படுத்தியபடி ஓம் நமசிவாய சொல்லி ஆரத்தி எடுக்கப்பட்டது.

இன்று அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெறவுள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2024இல் வெளியிடப்பெற்றது.